THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I would like to have notice.

*211 *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have taken steps to reduce the administrative expenditure; and

(*b*) if so, whether those steps will affect the efficiency in the administration?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Attention is invited to the statement placed on the table of the house with reference to Legislative Assembly Question No. 210 (Starred).

(*b*) No, Sir.

திரு. எஸ். மாதவன் : பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்களைக் குறைக்க வேண்டுமென்று அரசாங்கம் ஏதாவது உத்தரவு அனுப்பியிருக்கிறதா ? அதை மீண்டும் பரிசீலனை செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுதிருக்கிற ஆசிரியர்களை எடுத்துவிட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு ஒன்றும் போடவில்லை. ஆனால், ஆசிரியர்கள், மாணவர்கள் எண்ணிக்கை விகிதாசாரம் நிர்ணயிக்கப்பட்டு, அது அனுசரிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. ஆனால், அதற்காக இருக்கிற ஆசிரியர்களை வேலையிலிருந்து எடுத்து அனுப்பிவிட வேண்டுமென்ற யோசனையும் இல்லை.

திரு. கி. இரா. சம்பந்தம் : இப்பொழுது பழைய ஸ்லாப் முறை மாறி ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்கள் என்ற ரேஷியோ வந்த பிறகு பல ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் சற்று முன்புதான் சொன்னேன். இப்பொழுதிருக்கிற ஆசிரியர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : எவ்வளவு சிக்கனத்தைக் கடைப்பிடிக்கலாம் என்பதை ஆராய்ந்து அறிய தனிக் குழு ஒன்றை நியமிக்க அரசாங்கம் முன்வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு அதற்கென்று ஒரு தனிக் குழு அவசியம் இல்லை என்றுதான் அரசாங்கம் கருதுகிறது.

மருத்துவக் கல்லூரியில் அனுமதிப்பதற்கான வயது.

*213. கேள்வி—**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பி.யு.஁ி. (P.U.C.) வகுப்பில் தேர்வுக்கான தற்போதுள்ள குறைந்த பட்ச வயதிற்கும், மருத்துவக் கல்லூரியில் அனுமதிப்பதற்கான குறைந்தபட்ச வயதிற்கும் ஏதேனும் வித்தியாசமிருக்கிறதா ?

(இ) ஆம் என்றால், அதைப் போக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes. (*b*) The matter is under examination.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : பதினைந்து வயது ஆறு மாதம் முடிந்திருந்தால் காலேஜில் சேரலாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி பி.யு.ஸி. வகுப்பு முடிக்கும்பொழுது 15 வயது 4 மாதம் முடிந்திருக்கும். அப்படியிருக்கும்பொழுது மெடிகல் காலேஜில் சேருவதற்கு மட்டும் 16 வயது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதனால் 3 மாதம் அதிகப்

[13th March 1963]

படி ஆவதால் பாஸ் செய்த மாணவர்கள் மருத்துவக் கல்லூரிக்குப் போவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகிறதே ? ஆகவே இந்த 3 மாதத்தைக் குறைத்து வயதை நிர்ணயிப்பது பற்றி அமைச்சர் அவர்கள் ஆலோசிப்பார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : 14 வயது 6 மாதம் at the time of admission into the Pre-University Course. அவர்கள் அதை முடிப்பதற்கு 15 வயது 9 மாதம் ஆகும். சரியான முறையிலே ஒரு ஆண்டிலே தேர்ச்சி பெறுவார்களேயானால், தேர்ச்சி பெற்ற பிறகு, ஜூலையில் அட்மிஷன் ஆகிற காரணத்தினால், அக்டோபரில் அவர்களுக்கு 16 வயது பூர்த்தியாகவேண்டும் என்று இன்டியன் மெடிகல் கவுன்சில் ஒரு கொள்கை வகுத்திருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : மருத்துவக் கல்லூரியில் சேருவதற்கான அதிகபட்ச வயது எவ்வளவு என்று இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது ? அதில் மாற்றம் ஏதேனும் செய்ய எண்ணம் உண்டா?

கனம் சபாநாயகர் : மாக்ஸிமம் ஏஜ் எவ்வளவு என்று கேட்கிறார்கள். 25 வயது, 30 வயது மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா என்று கேட்கிறார்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : மருத்துவக் கல்லூரியில் சேருவதற்கான அதிகப்படியான வயது எவ்வளவு என்று இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது ? அதில் ஏதேனும் மாற்றம் காண எண்ணம் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மாக்ஸிமம் வயது ஒன்றும் குறிப்பிடவில்லை. ஏற்கனவே வயது குறைவாக உள்ளவர்கள் அட்மிஷன் கேட்கிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இருபத்தைந்து வயது, முப்பது வயது வந்தவர்கள் மருத்துவக் கல்லூரியில் சேர விரும்பினால், அவர்கள் அனுமதிக்கப்படுவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனிப்பட்ட கேள்வி போட வேண்டும்.

Coal (Chingleput district)

* 214 *Q.*—SRI V. SANKARAN :
PULAVAR K. GOVINDAN :
SRI S. MADHAVAN :
SRI RAMA ARANGANNAL : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that a large deposit of coal was discovered recently in Chingleput district; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government have received reports of occurrence of coal in Chingleput district, but it would be very premature to say that deposits which can be worked economically have been located. The Director-General, Geological Survey of India, has been asked to send a detailed report in the matter and his reply is awaited.

புலவர் கா. கோவிந்தன் : இங்கே கிடைக்கிற நிலக்கரியையும், திருக்கழுக்குன்றத்தில் கிடைக்கிற இரும்பையும் வைத்துக்கொண்டு ஒரு உருக்கு ஆலையை அமைக்கவும், அதை வெளிநாட்டுக்கு அனுப்பி பரிசீலனை செய்வதற்கு மகாபலிபுரத்தை ஒரு நல்ல துறைமுகமாக முன்கூட்டியே அமைக்க முயற்சி எடுக்கப்படுமா ?